**ரிதிமாலியத்த பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 02 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 16 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூன் 23 திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து ரிதிமாலியத்த பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதத்திற்காக அறவிட வேண்டிய ரூபா 387,030 பெறுமதியான முத்திரைக் கட்டண வருமானம் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரி செய்வதற்கு விடய அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 1,797,721 பெறுமதியான சந்தை குத்தகை வருமானம் நிதிநிலைமை கூற்றில் கிடைக்க வேண்டிய சொத்தாக காட்டப்படவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரி செய்வதற்கு விடய அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பல் ரூ பா 154,257 மற்றும் சபை உறுப்பினர் படி மீள்நிரப்பல் 300,000 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரி செய்வதற்கு விடய அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| (iv) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய மூலதன மாணியம் ரூபா 1,050,297 நிலுவை மூலதன மாணியமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | சரி செய்வதற்கு விடய அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (v) | மீளாய்வாண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்ட பொது வைப்பு ரூபா 458,411 பொது வைப்புக் கணக்கு செலவு வைக்கப்பட்டதுடன் திரண்டநிதிக்கு வரவு வைக்கப்பட்டமையால் ரூபா 458,411 பெறுமதியான திரண்டநிதி குறைந்து காட்டப்பட்டதுடன் பொது வைப்பு கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | சரி செய்வதற்கு விடய அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

**(ஆ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 77,115,390 பெறுமதியான காணிகட்டட மீதிக்கான உறுதிப் பத்திரம், திட்டம், மாற்றல் கட்டளை என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக்கூடிய வாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணி கொள்வனவு செய்து அளவீடு செய்வதற்கு பிரதேச செயலாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இலக்கம் 15 பிரதேச சபைச் சட்டம் | | | |
| | 122,126(அ) பந்தி மற்றும் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 இலக்க வர்த்தமானி அறிவுறுத்தலின் அனுமதிக்கப்பட்ட உபவிதியின் 39 வது பந்தி | ரிதிமாலியாத்த சந்தியில் உள்ள 24 விளம்பர பலகை சம்மந்தமாக அறவிட வேண்டிய ரூபா 101,200 கட்டணம் அறவிடப்படவில்லை. | நிலுவை கட்டணம் அறவிடப்பட வேண்டும். | அறவிட வேண்டிய கட்டணம் செலுத்துமாறு அதனுடன் தொடர்பான நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | நிதி ஒழுங்கு விதி 571 | இரு வருடத்திற்கு மேற்பட்ட 12 எண்ணிக்கையான காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 127,049 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமானங்களின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக் குறைபாடுகள் சரி செய்ய விடய அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,966,982 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,822,307 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,498,500 | 2,498,500 | 716,035 | 1,782,465 | 495,000 | 495,000 | 579,249 | - |
| (ii) | வாடகைகள் | 5,884,000 | 5,884,000 | 6,850,802 | - | 6,816,211 | 6,816,211 | 5,410,263 | 1,405,948 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 812,100 | 812,100 | 616,000 | 196,100 | 762,100 | 762,100 | 621,250 | 140,850 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,817,000 | 1,817,000 | 2,678,717 | - | 1,502,000 | 1,502,000 | 2,470,052 | - |
| | மொத்தம் | 11,011,600 | 11,011,600 | 10,861,554 | 1,978,565 | 9,575,311 | 9,575,311 | 9,080,814 | 1,546,798 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 05 வருடத்திற்கு மேலாக காணப்பட்ட நிலுவை மூலதன மாணியம் ரூபா 5,011,526 நிலுவை கடை வாடகை ரூபா 157,799, நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 2,799,154 மற்றும் நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 909,027 அறவிடப்படவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானம் அறவிடுவது தொடர்பான அலுவலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 909,027 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 3,186,184 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | இணைப்புக்கள் தயாரித்து மாகாண உள்ளூராட்சி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பந்தியின் பிரகாரம் 30 நோக்கம் செய்வதற்கு உபவிதிகள் செய்யப்படவேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 15 நோக்கங்களுக்காக உபவிதிகள் செய்யப்பட்டது அல்லது உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் செய்யாத காரணத்திற்காக உபவிதிகள் செய்யப்பட வேண்டும். | 15 உபவிதிகளை தற்போது உள்வாங்கியுள்ளோம். மற்றும் மிகுதி விடயம் சம்மந்தமாக உபவிதி தயாரிக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | 2020 ஆம் வருடத்தில் தயாரிப்பதற்கு விடய அலுவலருக்கு எழுத்து மூலமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும் | எதிர்வரும் காலத்தில் செய்யப்படும் அபிவிருத்தி நடவடிக்கைக்கு இவ் அளவுகோள்கள் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்கின்றேன். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 7 பதவிகள் தொடர்பாக 7 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | தேவையான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு உள்ளுராட்சி ஆணையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளேன். |

## 3.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டில் சபையால் விலை மனுக்கோராது 05 சந்தர்ப்பங்களில் ரூபா 166,880 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளும் போது விலை மனுக்கோரி கொள்வனவு செய்ய வேண்டும். | இவ் விடயம் எதிர்வரும் காலத்தில் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கும்படி விடய அலுவலருக்கு தகவல் வழங்கியுள்ளேன். |
| (ஆ) | 05 வருடத்திற்கு மேலான காலத்தில் இருந்து காணப்பட்ட செலுத்த வேண்டிய செலவின கடன்கொடுநர் ரூபா 1,386,237, ஒப்பந்த கடன்கொடுநர் ரூபா 11,936,857 மற்றும் கடை சென்மதியாளர் ரூபா 2,353,791 தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய செலவு மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். | குறைபாடு சரிசெய்ய தேவையான நடவடிக்கை எடுக்க விடய அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 01 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் உள்ளூராட்சி அதிகார மட்டத்தில் நடைமுறைப்படுத்தியபோதும் குழு நடாத்துவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களம் இணைந்து செயற்படுத்திமையாலும் மற்றும் கலந்துகொள்ளும் அலுவலரையும் இணைக்க முடியாமையாலும் உள்ளூராட்சி அதிகார மட்ட கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்த முடியாதுள்ளது. |